
# குடியானவன்

அல்லது

# கிராமராஜ்யம்.



10 JUL 1951

எழுதியவர் :

C. அனந்தாச்சாரி, B. A., B. L.,

சேலம்.

○ அணு நான்கு.

1951 [எவர்க்குமுரித்து.

1140

# ஒழியவேண்டியவை.

1. சிகப்பு நாடாத்தனம் (**Red Tape-ism**) ஒழிய வேண்டும்.

2. உத்தியோகஸ்தரின் "திமிர்" அடங்க வேண்டும்.

3. போலீசாரின் கொட்டம் ஒடுங்க வேண்டும்.

4. லஞ்சப் பேய் அகலவேண்டும்.

5. கள்ள வியாபாரம் அழிய வேண்டும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
22014
MADRAS-600 008

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUL 1951
MADRAS

# முன்னுரை.

—○—

1. இச்சிறு புத்தகத்தில் அடங்கிய விஷயங்கள் யாவரும் அறிந்தது: எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடியவை. இருந்தபோதிலும் அவைகளை நாம் நம்முடைய வாழ்க்கையில் சிறிதும் காட்டுகிறதில்லை. ஆகையால் அவைகளை எடுத்துக் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

2. விவசாயம் இந்நாட்டின் ஜீவாதாரம்: விவசாயி அதின் முதுகெலும்பு. இவை உறுதியாக இருந்தால் மட்டும் இந்நாடு உயிருடனிருக்கும். ஆனால் விவசாயிகளைப்போல் அல்லலுறுவோர் இந்நாட்டில் வேறு யாருமில்லை. விலை பொருள்களின் விலை சிறிது தூக்கி விற்பதால், அவர்கள் உயிருடனிருக்கிறார்கள். இல்லையெனில் அவர்கள் மாய்ந்திருப்பர்.

3. விவசாயிகளின் ஆக்ஷி ஏற்பட்டாலொழிய விவசாயமும் செழிக்காது. விவசாயிகளின் அல்லல்களும் ஒழியா. இதை வற்புறுத்தவே இப்புத்தகம் எழுதலானேன். விவசாயிகளின் ஆக்ஷியை, இந்நாட்டில் ஏற்படுத்துவது காங்கிரசுகாரர்களின் முதற்கடமையாகும்! ஆனால் அவர்களே அவ்வா

கூலியைக்காண்பதை எதிர்ப்பர்! இது அவர்கள் தாய்நாட்டுக்குச் செய்யும் பெருந்துரோகமாகும். இதின் பாதகம் அவர்களை ஒருபொழுதும் விட்டுவிடாது.

4. விவசாயிகளின் கக்ஷிக்கு ஏற்ற கொடி அவர்களுடைய தெய்வம் வீரபத்திரரின் உருவத்தைக் கொண்டதேயாகும். அவரே இதுகாறும் தமிழ்நாட்டுக் குடியானவர்களைக் காத்து வந்திருக்கின்றனர்.

சேலம்
2—7—1951

கி. அனந்தாச்சாரி.

# பொருளடக்கம்.


1. குடியானவன்.
2. விவசாயச் சீர்திருத்தம்.
3. காங்கிரசுகாரர்களின் சபலம்.
4. சோஷலிஸ்டு கக்ஷி.
5. குடியானவனுடைய கோரிக்கை.
6. கந்திரகோள கக்ஷிகள்.
7. விவசாயிகளின் கக்ஷி.

# கிராம ராஜ்யம்.

## 1. குடியானவன்.

இந்நாட்டில், ஸ்திரமான, உண்மையான, பிரதிநிதித்துவ, அரசாங்கம் ஏற்படவேண்டுமாயின், அது இந் நாட்டின் அடிப்படையான பொருளாதார நிலையில் பற்றுடையவர்களும், ஜன சங்கையில் பெரும்பாலோருமான மக்களால் அமைக்கப்பட வேண்டும். இந் நாட்டின் அடிப்படையான பொருளாதார நிலை, இதின் விவசாய வளமாகும். இந் நாட்டு விவசாயியைக் காமதேனுவுக்கு ஒப்பிடலாம். இவன் கொடுக்கும் வட்டியைக் கொண்டு லேவாதேவிகாரன் கொழுக்கிறான். இவனுடைய விளைபொருளை வாங்கி விற்கும் வர்த்தகன் சீமானாகிறான். இவனுடைய பணமே சர்க்காரின் பொக்கிஷத்தை நிறப்புகிறது. இவன் நேராகச் செலுத்தும் நிலவரி 42 கோடியாயினும், வர்த்தகர் செலுத்தும் வருமானவரி 198 கோடியில் பெரும் பாகம் இவனிடம் சம்பாதித்த ஊதியத்தின்பேரில் செலுத்துவதாகும். நீதி பரிபாலனத்துறையில், கோர்ட்டு பீசு கட்டண மூலமாகவும், இதர வழிகளிலும் சர்க்கார் பெறும் வருமானம் 70 கோடியில், பாதிக்குமேல் விவசாயி செலுத்துவதாகும். ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, உற்பத்தி வரி, பத்திரங்கள் விற்பனை, சில்லரை வரிகள் ஆகியவற்றால், சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் 374 கோடியிலும், ஒரு கணிசமான பாக

த்தை விவசாயி ஏற்றுக்கொள்ளுகிறான் என்பதிலும் ஐயமில்லை. வர்த்தகர், விவசாயியின் விளைபொருளை, ஈனவிலைக்கு வாங்கி உயர்ந்த விலைக்கு விற்பதுடன், அவனுக்கு வேண்டிய பொருள்களையும் அவனுக்கு விற்று லாபம் பெறுகின்றனர்.

2. விவசாயி தாங்குவது இவ்வரிப் பளுவுமட்டுமல்ல, இதைவிட அதிகமான தொகையை, இவன் சர்க்கார் அதிகாரிகளுக்கு லஞ்சமாகக் கொடுக்கிறான். கிராம கணக்கனுக்கு இவன் தவருத கப்பத்தைக் கட்டுகிறான். சர்க்காருடைய கண்ட்ரோல் சட்டங்கள் இவனை எல்லாவித சர்க்கார் அதிகாரிகளுக்கும் அடிமையாக்கிவிட்டன. இவர்களுடைய தயையின்றி இவன் இச்சட்டங்களினின்றும் தப்பி பிழைக்க இயலாதவன். மதுவிலக்குச் சட்டத்தினால் இவன் கண்டபயன் இவன் போலீசு அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டவனுகிவிட்டான். நூற்றுக்கணக்கான விவசாயிகள், நாள்தோறும், இச் சட்டத்தின்கீழ் சிறை புகுவதைக் காண்கிறோம். கிராமங்களிலுள்ள பரஸ்பர விரோதங்களும் மாச்சரியங்களும் இச்சட்டத்துக்கு உணவையளித்து வருகின்றன.

3. விவசாயியின் மூன்ருவது தொல்லை இவனுடைய தீராத வழக்குகளாகும். ஒரு சிறியவேலி, வரப்பு, தொலை, வாய்க்கால் ஆகியவை சம்மந்தமான சச்சரவுகள் இவனை வதைத்து வருகின்றன. இவைகள் சம்பந்தமாக, இவன் ஏராளமாகப் பொருளைச் செலவிடுவதுடன், தன் அலுவல்களை விடுத்து, வருஷக் கணக்காக, கோர்ட்டுவாயில்களைக் காக்க வேண்டியவனுகிறான். இப்பொழுது இருக்கும் நீதி வழங்கும்முறை, இவனுடைய வாழ்க்கைக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்றதல்ல. இவன் கல்வி பயிலாதவன், விவகார நுணுக்கங்களையறியாதவன். நிலத்தையே தஞ்ச

மென்றிருப்பவன். இவனுடைய வழக்குகள் இவனுடைய இடத்திலேயே, இவனையறிந்த இவனுடைய அநுதாபிக ளால், இவனுக்குச் செலவில்லாமல், தீர்க்கப்படவேண்டும். இந்நாட்டில் காணும் சில சட்டங்களும் இவனுக்கு ஒவ்வா தவை. புரோநோட்டின் மகிமையையாவது, அல்லது தஸ்தாவேஜு சாக்ஷியத்தின் பெருமையையாவது, அல்லது தஸ்தாவேஜின்முன் வாய்மொழிச்சாக்ஷியம் செல்லாதென் பதையாவது, அல்லது விற்றசொத்துக்குப் பிறந்த மறு விக்கிரய ஒப்பந்தம் உதாரண குணத்தால் பிறந்ததெனறு சட்டம் கருதுவதையாவது, ஏழை விவசாயி எவ்வாறு அறிவான்?

4. இந்நாட்டின் நீதி பரிபாலனமுறை மிகவும் வருந் தத்தக்க நிலையில் இருக்கிறது. வழக்காளர்கள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய கோர்ட்டு பீசு கட்டணத்தைச் செலுத் துகின்றனர். இருதரத்தினரும் வாக்கறிஞர்களுக்கு கொடு க்க வேண்டிய பீசையும் கொடுத்து விடுகின்றனர். இரு கக்ஷியிலும் சாக்ஷிகள் வந்து குவிகின்றனர். இந் நிலையில் நீதிபதியின் மனம் வழக்கை ஆராய்ந்து, நீதியை வழங்கு வதிற் செல்லுகிறதில்லை. ஆனால், சுருக்கமான வழியில்—ராஜியாலோ, அல்லது குருக்கு சட்டவழியாலோ—வழக்கை எப்படி ஒழிக்கிறதென்பதையே நாடி நிற்கிறது. இது அசல் கோர்ட்டின்போக்கு. அபீல் கோர்ட்டிலோ, தஸ்தா வேஜு பலத்தின்பேரில் நிற்கும் தீர்ப்பின் பேரிலுள்ள அப்பீல்களும், கடன் பத்திரம் சம்மந்தமான பணவிஷய அப்பீல்களும், சாதாரணமாகப் பலிப்பதே கிடையாது. மற்ற அபீல்களிலும் வாக்கறிஞர் இரண்டொரு நிமிஷத் துக்கு அதிகமாக வாதிக்கப்புகின், நீதிபதிக்குத் தலை நோவு உண்டாகின்றது. அசல் தீர்ப்பு அநியாயமாயினும்,

அபீலில் அதுவே காயமாய் விடுகிறது. ஞாயத்தை ஆராய்ந்து நீதி வழங்க வேண்டுமென்கிற எண்ணம் நீதிமன்றங்களைவிட்டு அகன்றுவிட்டது. இவைகளுடன், விஷயமறியாத தேர்ச்சிபெருத, கற்றுக்குட்டிகள் நீதி பதிகளாக நேமிக்கப்படுகின்றனர். இவர்கள் விசாரிக்கக் கூடிய வழக்குகளுக்கு வரம்பும் கிடையாது. இவ்வறிவிலி களின் செயல்களால் அநேக ஏழைக்குடும்பங்கள் நசித்து விடுகின்றன. அரசாங்கத்தின் கவனமும் நீதிவழங்கவேண் டுமென்பதில் செல்லுகிறதில்லை. அது உத்தியோகங்களைப் பெருக்குவதிலும் அவைகளைத் தங்களுடைய உற்ருர் உற வினருக்குப் பெறுவதிலுமே ஊன்றியிருக்கிறது.

5. இப்பொழுது காணும் நீதிவழங்கும்முறை இந் நாட்டின் பண்டை வழியுமல்ல: ஞாயத்தை வெளிப்படுத் துவதற்கு ஏற்றதுமல்ல. இது முகலாயர் வகுத்த முறை யின் விபரீத விஸ்திரிப்பு. இதற்குப்பொறுப்பு கடந்த பிரிட் டிஷ் அரசாங்கத்தைச்சாரும். ஆனுல் இது அவ்வரசாங்கத் துக்கும் பெருமையைக்கொடுக்கக்கூடியதல்ல. மக்களுடைய பணத்தைப் பலதரப்பட்டோர் பறித்து நுகர்வதற்கும், அவர்களுடைய பொழுதை வீணுக்கி அவர்களைப்பொய்மை யில் புகுத்துவதற்கும், ஏற்ற ஒரு பொறியை அமைப்பது அரசாங்கத்தின் கருத்தாயின், இற்றைய நீதிமன்றங்களி னும் திறனுள்ளதை அவர்கள் படைத்தல் அரிது. இம்மன் றங்களிற் செயலாற்றும் சிப்பந்திகளின் செய்கைகளும் வெறுக்கத்தக்கவை. ஒரு கக்ஷியின் ஆதாவுகளை எதிர் கக்ஷிக்கு எடுத்துக்கொடுத்து விடுகின்றனர். பத்திரங்களின் கையெழுத்துக்களையும் ரேகைகளையும் அறிய முடியாமற் செய்து ஆதாவுகளைப் பாழாக்கி விடுகின்றனர். இவ்வொழுங் கீனங்களில் வாக்கறிஞரின் சிப்பந்திகளும் கோர்ட்டு சிப்பந்

திகளுக்கு உதவியாக நிற்கின்றனர். இந்நாட்டு பழக்கவழக்கங்களை யொட்டியதும், மக்களுக்கு அல்லலைக்கொடாது, நீதியை எளிதில் அளிப்பதுமான ஒரு முறையைச் சடுதியில் வகுத்தல் இந்நாட்டு அறிவாளிகளின் கடமையாகும். ஆனால் அவர்களுடைய கவனம் இத்துறையில் இன்னும் செல்லவில்லை. வழக்குகளை, அவைகளிலடங்கிய சொத்துக்களின் பணமதிப்பையொட்டி மட்டுமல்லாமல், அவைகளை, ஸ்தலத்தில் விசாரிக்க வேண்டியவை யென்றும், பஞ்சாயத்துமூலம் பைசலாகவேண்டியவையென்றும், அப்பீலுக்குரியவையென்றும், பலவகையாகப் பிரிக்கவேண்டும். சில எளிய வகைகளை ஆரம்ப நீதிபதிகளின் பழக்கத்துக்காக ஒதுக்கியும் வைக்கவேண்டும்.

## 2. விவசாயச்சீர்திருத்தம்.

1. விவசாயத்தைச் சீர்ப்படுத்துவதுபற்றியும், விவசாயியை முன்னேற்றுவது குறித்தும், பேசாத அரசியல்வாதியோ, சர்க்கார் உத்தியோகஸ்தனோ கிடையாது. ஆனால் இது முழுதும் வெளிவேஷம். விவசாயி விழித்துக்கொண்டுவிட்டால், அவனை ஏமாற்றி அவனுடைய வாக்கைப்பெற முடியாதென்பதை அரசியல்வாதி அறிவான். அதேமாதிரி, சர்க்கார் உத்தியோகஸ்தனும், விவசாயிதன் சக்தியை உணர்ந்து விட்டால், அவனைத்தன் மனம்போனபடி ஆளமுடியாதென்பதை யறிவான். விவசாயியை உய்விக்கத்தோன்றிய தாகச்சொல்லும் சர்க்காரின் ரெவினியூ டிபார்ட்மெண்டு விவசாயியைப் படுத்திவைக்கும் பாடு கொஞ்சமல்ல. கிணர் மராமத்து விஷயமாகச்சர்க்கார் வழங்கியதாகச்சொல்லும் மானியத்தொகையின் நான்கில் மூன்று பாகம்கூட விவசாயியை அடைகிறதில்லை. அவன், இந்த மானியத்தொகையுடன்,

கைப்பணத்தைச்சேர்த்தும், கடன் வாங்கிப்போட்டும், தொகையைப்பெருக்கி, அதைக்கொண்டு கிணர் வெட்டுகிருன். ஆனல் சர்க்கார் கீழதிகாரிகளின் சூழ்ச்சிகளால், இப்பூதாகாரமான கிணர்கூட, சர்க்கார் மேலதிகாரிகளின் அதிகாரக்கண்களுக்குப் புலனுகிறதில்லை. உடனே மானியத் தொகை கடனுகமாறுகிறது. குடியானவன் திகைக்கிருன்! வேறு சொத்தை விற்ருே, அல்லது பிறரிடம் கடன் வாங்கியோ சர்க்கார் கடனைக்கட்டுகிருன். கலெக்டர் முதல் கர்ணம் வரையிலுள்ள ரெவினியூ அதிகாரிகளிடம், குடியானவன் விஷயத்தில், நேர்மையை எதிர்பார்க்க முடியாது. நாட்டின் சுதந்திரத்துக்குப்பின் நமது அதிகாரிகள் அடைந்திருக்கும் அகந்தையும், இறுமாப்பும் அளவுகடந்தது. இவர்களுடைய அதிகாரத்திமிரைக்கண்டு பண்டை எதேச்சாதிகாரிகளும் வெடகமுறுவர். நாட்டின் சுதந்திரம், மக்களுக்கன்று, தங்களுக்கேயென்று இவ்வதிகாரிகள் ஏமாப்புறுகின்றனர். இந் நாட்டின் துர்க்கதி, மிகவும் பெரிது! பிறநாடுகளில், பெருமையாகப்பேசப்படும் கூட்டுறவு இயக்கமும் இங்கு, ஒரு முதலாளிக்கூட்டமாகமாறியுள்ளது. இக் கூட்டுறவாளர் தங்கள் முதலையும் வட்டியையும் பாதுகாப்பதில் காட்டும் கவனத்தில் ஒரு சிறு அளவுகூட குடியானவனுடைய க்ஷேமத்தில் செலுத்துவதில்லை. பல குடியானவர்கள் சேர்ந்து கடன் பத்திரம் எழுதிக்கொடுத்ததில் மட்டும், இவர்களிடம் ஒரு சிறு தொகையும் கடனுக வாங்கமுடியும். இக்கூட்டுப்பொறுப்பு, பின்னர் கடன் வாங்கினேர்களுக்குள் விரோதங்களையுண்டு பண்ணுகிறது. குடியானவன் கோருவது தன்னுடை தனிப் பட்ட நாணயத்தின்பேரில் கிடைக்கும் கடன்வசதியாகும். கூட்டுறவாளர் கிராம சங்கங்களுக்கு கொடுக்கும் கடன் களுக்கு, அவைகளின் நிர்வாகஸ்தர்களிடம், அவர்களுடைய

சொந்த பொறுப்பில், கடன் பத்திரங்கள் எழுதி வாங்கிக் கொள்ளுகின்றனர். இம்முறை அநேக கிராமங்களையும் குடும் பங்களையும் பாழாக்கியிருக்கிறது. "கூட்டுறவு" என்னும் சொல்லைக்கண்டு அநேக மக்கள் பயமுறுகின்றனர். பாரபக்ஷத்துக்கு இவ்வியக்கம் தாயகம். இதின் உத்தியோகஸ்தர்களிற் பலர் ஒழுங்கானவர்களுமல்லர். இவைகளின் சிப்பந்திகளிடத்துமோசமும் பித்தலாட்டமும் இல்லாமலுமில்லை. இவ்வியக்கத்தில் ஈடுபட்டோரின் வருடாந்தர கூட்டத்தை, ஒரு நண்பர், பழைய பெருச்சாளிகளின் சம்மேளனத்துக்கு ஒப்பிட்டார் இது பொருத்தமற்றதென்று யாரும் கூறமுடியாது. இவ்வியக்கத்தினால், குடியானவனுக்கு, இதுகாறும் யாதொரு நன்மையும் ஏற்படவில்லை. இனியும் ஏற்படாதென்பது திண்ணம்.

2. குடியானவன் தன்னுடையநீண்ட தூக்கத்தைவிட்டு எழவேண்டும்! கண்ணைவிழித்துப்பார்த்து, நாட்டில் தன்னுடைய ஒப்பற்ற நிலையை அறியவேண்டும்!! இது விவசாய நாடு. விவசாயம் தழைத்தால், இங்கு எல்லா மக்களும் நலமுறுவர். இதின் சீர் குன்றின், அனைவரும் துன்புறுவர்! பிற நாடுகளுடன் ஒத்துப்பார்த்தால் நமது விவசாயம் மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கிறது. நாட்டின் ஜீவாதாரமாகிய இத்தொழிலை நாம் மேம்படுத்தவேண்டும். இதைச்செய்ய யாரே உரியவர்? விவசாயிகளின் கஷ்டங்களையும், விவசாயத்தின் நுட்பங்களையும், விவசாயிகளைப்போல் வேறுயாரே அறிவர்? பிறநாட்டு முறைகளையும் மேம்பாடுகளையும் நம் நாட்டுக்கேற்றவாறு திருத்தியமைக்கும் ஆற்றலும் பயிற்சியும் பிறர் யாருக்கே உளது? ஆதலால் நம் நாட்டு விவசாயத்தைச்சீர்ப்படுத்த வேண்டிய பொறுப்பு நமது விவசாயிகளையேசாரும்.

3. இந்நாட்டின் ஜனசங்கை 34 கோடியில், இதின் 5 லக்ஷம் கிராமங்களில் வாழும் குடியானவர்கள் 17½ கோடியாவர். இவர்களே இந்நாட்டு மக்களிற் பெரும்பாலோராகவும் இருக்கின்றனர். இப்பதினேழரைக்கோடி மக்களும் விவசாயத்தின் வளமாகிய ஒரே பொருளாதாரப்பற்றைக் கொண்டவர்கள். இத்தகைய, பொருளாதாரப்பற்றைக் கொண்ட ஒற்றுமை, மற்றமக்களிடைக்காண்டலரிது.

4. இந்நாடு விவசாயநாடாதலாலும், விவசாயிகளே இந்நாட்டு மக்களிற்பெரும்பான்மையோராதலாலும், விவசாயத்தின் வளமே நாட்டின் முழுநலமாதலாலும், நாட்டின் விவசாய நலத்தைப்பெருக்க விவசாயிகளே தக்கோராதலாலும், இவ்வினையை ஆற்றுவதற்கு அரசியல் அதிகாரம் தேவையாதலாலும், விவசாயிகள் இந்நாட்டையாள்வதற்குச் சிறிதும் தயங்காமல் முன்வரவேண்டும்! "தன்கையே தனக்குதவி" என்னும் முதுமொழியை இம் மக்கள் என்றும் நினைவில் நிறுத்தவேண்டும்!.

## 3. காங்கிரசுகாரர்களின் சபலம்.

1. சென்ற மூன்று ஆண்டுகளுக்கு மேலாக, இந்நாடு காங்கிரசு கக்ஷியின் ஆக்ஷியைப் பொறுமையுடன் சகித்து வந்திருக்கின்றது. இவ்வாக்ஷியில், மக்கள் கண்கூடாகக் கண்டது வீண்படாடோபங்களும், ஆடம்பரப் பேச்சுக்களுமாகும். "ஜமீன்களையொழித்தல்", "மதுவிலக்குச்சட்டம்" முதலிய பகட்டு மொழிகள் மக்கள் காதுகளைத்துளைத்துவிட்டன. ஆனால் இவைகளால் மக்களுக்கு யாது பயன் உண்டாயிற்றென்பது விளங்கவில்லை. ஜமீன்கள் ஒழிந்ததினால் ஜமீன்தார்கள் பாபர்கள் ஆய்விட்டார்கள். அவர்களுடைய உரிமைகளைச் சர்க்கார் அடைந்துவிட்டார்கள். ஜமீன்

ஒழிப்பின் பாவ புண்ணியங்கள், காங்கிரசு சர்க்காரைச்சார்ந் தது. ஜமீன்தார்களுக்குச் செலுத்திவந்த தீர்வையை இப் பொழுது குடியானவர்கள் சர்க்காருக்குச்செலுத்துகிறார்கள். இதினின்றும் இவர்கள் தப்ப முடியாது. ஜமீன்தார்களுக் குத் தீர்வையை பைசல்கால நிர்ணயத்துக்குமேல் உயர்த்த அதிகாரமில்லை. ஆனால், இப்பகாசுரனாகிய காங்கிரசு சர்க் கார் குடியானவர்களுடைய தீர்வையைத் தங்களிஷ்டப்படி, வரம்பின்றி, உயர்த்த உரிமைபடைத்தது. அவர்களுடைய கவனமும், கொஞ்ச காலமாக குடியானவன் பேரில் புது வரிபளுவைச் சுமத்துவதிலேயே புகுந்திருக்கிறது. மது விலக்குச் சட்டத்தினால், போலீசுகாரர்கள் எல்லாரும் பணக் காரர்களாகியிருக்கிறார்கள், குடியானவன் சிறைக்குச் செல் லும் பேற்றைப் பெற்றிருக்கிறான்.

2. இக் காங்கிரசு ஆக்ஷியினால் உண்டான வேறு சில விஷயங்களையும் கவனிப்போம். இவர்களுடைய திறமையின் மையினாலோ, அல்லது இவர்களுடைய உடந்தையினாலோ, கள்ள வியாபாரம் இந் நாட்டில் குடி கொண்டுவிட்டது. பெரிய ஆலைச் சொந்தக்காரர்கள் இவ்வழியில் கோடிக்கணக் காகச் சம்பாதித்திருக்கின்றனர். சாதாரண வர்த்தகர்கள் லக்ஷக்கணக்காக அடைந்திருக்கின்றனர். இவ்வாக்ஷியில் கள்ள வியாபாரிகள் சுகமாக வாழ்கிறார்கள். இவர்கள் ஒழுங் கற்ற முறையில் சேர்த்த பொருளைக் கைப்பற்ற இச் சர்க்கா ருக்கு ஆற்றலில்லை. இத் துன்மார்க்கர்களுக்கு, இச்சர்க் கார், பின்னும், சலுகையும் காட்டி வருகிறது. பெரிய முத லாளிகளைக்கண்டு அஞ்சுவது ஒரு சர்க்காரின் கன்னியத் துக்கு ஏற்றதல்ல. இச்சர்க்காரின் முறையால் வருந்துவோர் சாதாரண மக்களாவர். இவர்களுக்கு உடுக்கத்துணி கிடை ப்பது, இந்நாட்டில், அரிதாகிவிட்டது. துணியை விநியோ

கம் செய்ய உரிமைபெற்ற வியாபாரியோ அல்லது கூட்டுறவு சங்கமோ, தங்களுக்கு கொடுக்கப்பட்ட துணியின் நான்கில் மூன்று பாகத்தைத் தப்பு கணக்கு எழுதியோ, அல்லது சிப்பந்திகளுக்கு பங்கிட்டுக் கொடுத்தோ, கள்ள மார்க்கெட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். பாக்கி நிற்கும் நான்கில் ஒரு பாகத்தை விநியோகம் செய்யும்பொழுது, கள்ளமார்க்கெட்டில் பழக்கமுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டமாகச் சென்று அதைக்கைப்பற்றிவிடுகின்றனர். உடனே, அவர்கள் அதைத் துணி இல்லாமல் பரிதபிக்கும் சாதாரண மக்களுக்கு இரட்டிப்பு விலைக்கு விற்றுவிடுகின்றனர். காங்கிரசு ஆக்ஷி உள்ளவரையில் கள்ள வியாபாரமும் இங்நாட்டைவிட்டு நீங்காதென்பதற்குப் பல சான்றுகள் உள.

3. காங்கிரசு ஆக்ஷியின் கீழ், கள்ள வியாபாரத்தைப் போல், அதற்குச் சமமாகத் தழைத்து, செழித்து, ஓங்கி வளர்ந்திருப்பது அதன் உடன் தோன்றலாகிய, எங்கும் நிறைந்த லஞ்சப் பழக்கமாகும். சர்க்கார் அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள், சேவகர்கள், சிப்பந்திகள் ஆகிய இவர்களில் நூற்றுக்கு இரண்டுபேர் யோக்கியமானவர்களைக் காண்பதரிதாகிவிட்டது. சாதாரண பள்ளிக்கூடத்து உபாத்தியாயர், பத்திரங்களைப் பதிவு செய்யும் சப்ரிஜிஸ்தரார், சர்க்கார் நடத்தும் ஆஸ்பத்திரியில் சேவகம் செய்யும் வைத்தியர் ஆகியவர்களிடத்தில் சாமானிய ஜனங்கள் லஞ்ச ஆசையை எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், காலத்தின் போக்கு, இவர்களிடம் இவ்வாசை மிகுதியாகக் காணப்படுகிறது. ஒரு மாணாக்கன் உயர் வகுப்புக்கு மாறுவதற்கு உபாத்தியாயனுடைய உதவிவேண்டியிருக்கிறது. இது இலவசமாகக் கிடைக்கிறதில்லை. சப்ரிஜிஸ்தரார் தன்னை ஒரு காட்டுராஜாவாக நினைத்துக் கொள்ளுகிறான். சர்க்கார்

விதிக்கும் கட்டணங்களுடன், தன்னுடைய சொந்த கட்டணங்களும் வசூலாகி விடுகின்றன. பணப்பசையுள்ள நோயாளிகளைத் தேடிப்பிடிப்பதற்கும், அவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கும் சர்க்கார் ஆஸ்பத்திரிகள் உதவுகின்றன. ஏழை நோயாளிகள் பொழுது முழுதும் காத்தாலும் அவர்களுக்கு ஒரு அவுன்சு சுத்த தண்ணீர்கூட அங்கு கிடைக்காது. நமது சர்க்கார் நிலயங்களின் சீர்கேடுகள் வன்நெஞ்சம் படைத்த நமது சர்க்கார் அதிகாரிகளின் மனதைத் தவிர வேறு எவனுடைய மனதையும் உருக்கிவிடும்.

4. காங்கிரசு ஆக்ஷியின்கீழ், சர்க்காரிடத்தில் அதின் சேவகர்களுக்கு இருக்க வேண்டிய "குளிர்" (அதாவதுபயம்) அறவே விட்டுப்போய்விட்டது. காங்கிரசுகாரர்களிடத்திலுள்ள திறனின்மையையும், சுயநல ஆசையையும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அறிந்துகொண்டுவிட்டனர். இப்பொழுது நாட்டில் நடப்பது மந்திரிகளின் ஆக்ஷியல்ல, சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் ஆக்ஷியேயாகும்!.

5. வரியின் பளுவு தாங்கமுடியாமலிருக்க, அதைத் கண்டும் முறை மிருகத்தன்மைத்தாயிருக்கிறது. பணக்காரர்கள் தங்கள் பங்கு வரியினின்றும் சுலபமாகத் தப்பிக் கொள்ளுகின்றனர். சாதாரண மக்களோ, ஈவு இரக்கமின்றி நசுக்கப்படுகின்றனர். இவ்வரிகளில் சில விசேஷங்களையும் காணலாம். அநாகரீகமானவிற்பனைவரி இந்நாட்டில் வேரூன்றிவிட்டது. பழைய நபர்வரி (Poll Tax) இதைவிட பல மடங்கு மேலானது. ஒருமனிதனுடைய உயரம் அல்லது பருமன் பேரில் தவறாமல் வரிவிதிக்கலாம். ஒருவனை ஒரு அதிகாரி தன்முன் ஆஜராகும்படி கட்டளையிட்டு, அவன் அவ்விதம் ஆஜராகத்தவறினால், அவனுடைய உதவியின்றி

யே அவ்வதிகாரி தன் அதிகாரத்தைச் செலுத்துவதுதான் எவருமறிந்த ஞாயமுறை. ஆனல் நமது நாட்டு மேதாவிகளுக்கு இந்த ஞாயமுறை ஒவ்வவில்லை. நமது வருமான வரிச் சட்டத்தின்படி, ஒருவனுக்கு, ஆஜராகாத குற்றத்துக்கு, வரியைப்போல் ஒருமடங்கு அல்லது அரைமடங்கு அபராதம் விதிக்கலாம். நமது சட்டங்களில் காணும் காட்டுமிராண்டித்தனம் எங்கிருந்து பின்பற்றப்பட்ட தென்பதை அறிவது அரிது. ஏழைகளைத் துன்புறுத்தி வசூல் செய்யப்பட்ட இவ்வரிப்பணங்கள், மனம்போனபடி, வாரி இறைக்கப்படுவதைக்காண மக்கள் மனம் கொதிப்புறுகின்றது!.

6. பிறநாட்டினர், நமது நகரங்களைக் காணவரும் பொழுது, இங்குள்ள பிச்சைக்காரர்களின் குழா அங்களைக் கண்டு வியப்பதுண்டு. நமது நாட்டைப்பற்றி அவர்கள் என்றும் மறவாமல் நினைப்பில் இருத்திக்கொள்வது இப்பிச்சைக்காரர்களின் கூட்டங்களேயாகும். ஆனல் காங்கிரசு ஆக்ஷியின்கீழ், நமது நாடே, கையில் ஓடு எந்தி, பிறருடைய நாடுகளுக்குச்சென்று, உணவுக்குயாசிக்கும் நிலைக்கு வந்துவிட்டது! துணிப்பஞ்சத்துக்கு காரணம் வர்த்தகரின் பேராசையெனலாம். உணவுப்பஞ்சத்துக்கு காரணம் குடியானவரின் ஒத்துழையாமையெனலாம். ஆனல் இவ்விரண்டுக்கும்காரணம் நமது சர்க்காரின் மூடத்தனம் என்பதிற் சந்தேகமில்லை. உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி நாம் வருந்துவது நமது சுதந்திரமீன்ற முதற்பலனகிவிட்டது!.

7. மகாத்மாஜியின் கொள்கைகள் எல்லாம் நாட்டில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஆனல் அவருடைய பெயர் மட்டும், மக்களை ஏமாற்றுவதற்கு உபயோகப்படுகிறது.

இந்த வித்தையிற் சிறந்தவர்கள் காங்கிரசுகாரர்கள். காங்கிரசுகாரர்களுடைய ஒழுங்கீனங்களை மகாத்மாஜீ அறிந்தவுடன், அவர் காங்கிரசு ஸ்தாபனத்தையே கலைத்துவிடத் தீர்மானித்தனர். ஆனால், நாட்டின் துரதிருஷ்ட வசத்தால், அவர், அதைச்செய்து முடிப்பதன் முன்பே, மறைந்துவிடும்படி நேர்ந்தது. இப்பொழுது அவருடைய முக்கிய சீடர்கள், அதே ஸ்தாபனத்தை ஸ்திரப்படுத்தவும் அதைத்தங்கள் கக்ஷியின் நலனுக்கு உபயோகிக்கவும் முன்வந்திருக்கின்றனர். இவ்வாண்டின் இறுதியில் நடைபெறவிருக்கும் சட்டசபைகளின் தேர்தலில், மகாத்மாஜீயின் பெயரை உபயோகித்தும், நேருஜீயியின் உருவத்தைக் காண்பித்தும், வெற்றிபெறவும், மறுபடியும் நாட்டின் ஆக்ஷியைக் கைப்பற்றவும், காங்கிரசுகாரர்கள் ஆசையுறுகின்றனர். மக்கள்து ஞாபகம் மிகக்குறுகியதென அவர்கள் நினைப்பர். "காங்கிரசு செய்த நன்மைகள்" என்று பறையடிப்பர். நமது பழைய பிரிட்டிஷ் எஜமானர்கள் "பிரிட்டிஷ் ஆக்ஷியின் நன்மைகள்" என்று ஆரவாரிக்கவில்லையா? இது மக்களுக்குப் புதிய விஷயமன்று. பழைய கதையே திருப்பிப்படிக்கப்பட்டுவருகிறது. பழைய வெள்ளையர் "வெள்ளையன் சுமக்கும் சுமை" என்று சொல்லிக்கொண்டு நமது ரத்தத்தை உரிஞ்சி வந்தனர். இப்புதிய கருப்பர்கள் "ராமராஜ்யம்" என்று சொல்லிக்கொண்டு நமது ஆவியையே மாய்க்க காத்துக்கொண்டிருக்கின்றனர். பிரிட்டிஷாரிடமிருந்து நாம் பெற்ற சுதந்திரம் உண்மையான சுதந்திரமல்ல. உடன் பிறந்தே கொல்லும் நோயைப் போன்ற, இச்சுயநல தேசத் துரோக காங்கிரசு கூட்டத்தாரிடமிருந்து மக்கள் மீள்வதே அவர்களுடைய மெய்யான சுதந்திரமாகும். மகாத்மாஜீ ஒப்பற்ற தீர்க்கதரிசி. நாட்டைச் செலுத்தும் நெறியை உணர்ந்தவர். நேருஜியோவெனின், எடுப்பார் கைப்பிள்ளை. தம்முடைய வாக்கின் வன்மை

யைக்கண்டு தாமே மயங்குகிறவர்! அவரைச் சூழ்ந் திருப்போரும் நேர்மையிற் சிறந்தோரல்லர். அடுத்த ஆண்டில், இம்மாகாணத்தில் மட்டும், நீர்ப்பாசன வசதி சம்மந்தமாக, அணைகள் கட்டுவதிலும் வாய்க்கால்கள் வெட்டுவதிலும், புதிய ரஸ்தாக்கள் போடுவதிலும் பல கோடி ரூபாய்கள் செலவிடப்போகின்றனர். சர்க்காரின் பொது வேலைகளின் இலாகாவை (P. W. D.) ஒரு கல்பக விருக்ஷத்துக்கு ஒப்பிடுவது வழக்கம். அதில், மந்திரி முதல் மேஸ்திரிவரையில் ஒவ்வொரு சர்க்கார் உத்தியோகஸ் தருக்கும் அவருடைய யோக்கியதைக்கும் பொறுப்புக்கும் ஏற்றவாறு "மாமூல்கள்" இறைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. அடுத்த தேர்தலில் இவ்விலாகாவின் மந்திரி பதவியைப் பெறுவோர், குபேரனைப் விடுவர் என்பதில் ஐய மில்லை.

## 4. சோஷலிஸ்டு கக்ஷி.

1. நமது நாட்டில் காங்கிரசுகாரர்களை தவிர்த்து, அர சியல் பதவிக்கு ஆசைப் படுவோர் சோஷலிஸ்டுகள் ஆவர். இவர்களுடைய முக்கியமான கொள்கை, நாட்டின் அடிப் படையான தொழில்களைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடத்த வேண்டுமென்பதாகும். அப்பொழுது தான், அவர்களுடைய கொள்கையின்படி, முதலாளிகளின் கொள்ளை குறையும்: தொழிலாளருக்குப் போதிய ஊதியம் கிடைக்கும். இப் பொழுது நமது நாட்டில் ரயில்வே, தந்தி, தபால், மின்சார சக்தி ஆகியவை சம்மந்தமான தொழில்களைச் சர்க்காரே நடத்துகின்றனர். இந்த அளவுக்கு, நாம் இப்பொழுதே, சோஷலிஸ்டு கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளோம், ஆனால், இவ்வளவுடன் சோஷலிஸ்டுகள் திருப்தியடைவ

தில்லை. இவர்களுடைய கண்களை முக்கியமாக உறுத்துவது நமது பெரிய ஆலைகளாகும். இப்பொழுது, நமது நாட்டில் சோஷலிஸத்துக்கு ஆதரவைக் கொடுத்து வருவது ஆலைச் சொந்தக்காரர்களின் ஒழுங்கீனமும் பேராசையுமாகும். ஆனால சோஷலிசம் பயனளிப்பதற்கு, அடிப்படையாக, ஒரு திறமையும் யோக்கியமும் வாய்ந்த சர்க்கார் வேண்டும். இது இல்லையேல், இச் சர்க்காரின் ஊழல்கள் இவர்கள் ஏற்கும் தொழில்களையும் சாரும்: நாட்டின் தொழில் வளமும் குன்றும். சோஷலிசத்தின் பெரிய இழுக்கு யாதெனில், அதின் கீழ் தனிமனிதர்களுடைய சுயேச்சையான தொழில் முயற்சிக்கு எவ்வித ஆதரவும் இராது; நாளடைவில், அவ்வித முயற்சியும் மறைந்து விடும். ஆதலால் ஆலைச் சொந்தக்காரர்களுடைய ஒழுங்கீனங்களையடக்குவதற்கு நாம் சோஷலிசத்தை ஏற்க வேண்டுமாவென்பதை யோசிக்க வேண்டும். இவர்களும் மற்ற பெரிய முதலாளிகளும் பல நூறு கோடி ரூபாய்களைக் கள்ள வியாபாரத்தில் சம்பாதித்துள்ளனர். இதற்கு இவர்கள் எவ்வித கணக்கும் சர்க்காருக்கு கொடுக்காமல் இருந்து வருகின்றனர். இப் பணங்களையும் இவர்கள் வெளியில் விடுகிறதில்லை: இருப்பாக மறைத்து, வைத்து வருகின்றனர், ஒரு ஆண்மையுள்ள சர்க்கார் இவைகளைக் கைப்பற்ற முடியுமென்பது பலருடைய கருத்து. ஒரு பிரஜையின் அக்கிரமங்களைத் தடுக்கமுடியாத சர்க்காருக்கு ஆக்ஷி புரியவே உரிமை இல்லை.

2. நிற்க, நாம் முக்கியமாக ஆராயவேண்டியது, இந்நாட்டின் ஜீவாதாரமான தொழிலுக்கு சோஷலிசத்தின் அடிப்படையான கொள்கை பொருந்துமாவென்பதாகும். இந்நாட்டின் முதன்மையான தொழில் விவசாயமாகும், இதில் சோஷலிஸ்டு கொள்கையை எப்படி பொருத்துவது

EGMO

என்பது விளங்கவில்லை. இந்நாட்டின் விவசாயத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடத்துவது சாத்தியமா? மேநாடுகளின் விவசாயத்துக்கும் இந்நாட்டின் விவசாயத்துக்கும் பெரும் வித்தியாசமுண்டு. மேநாடுகளில், விவசாயப் பண்ணைகள் மிகப் பெரியவை; விவசாயிகளின் சங்கை மிகவும் சிறியது. அங்கு விவசாயத்தைச் சர்க்கார் நடத்துவது சாத்தியமாக இருக்கலாம். ஆனால், இங்கு, பண்ணைகள் சிறியவை — விவசாயிகளின் சங்கையோ, கோடிக்கணக்கானது. நமது விவசாயம் கோடிக்கணக்கான சிறிய பட்டாதார்களைக்கொண்டது. இக்கோடிக்கணக்கான பண்ணைகளை ஆர்ஜிப்பதும், பல கோடி குடியானவ பட்டாதார்களைத் தங்களுடைய நிலங்களிலிருந்து விரட்டுவதும் ஒக்குமா? இதை நமது சர்க்கார் செய்யப்புகின், நமது நாட்டின் அமைப்பும், உருவமும், பொருள் நிலையும் மாறிவிடும்: நமது கிராமங்களை மறைந்துவிடும். அவைகளுடன், சுதந்திர புருஷனாகிய, குடியானவ பட்டாதாரனும் மறைந்து விடுவான். இவ்வளவும் யார்நன்மைக்காகச்செய்யவேண்டியதென்பதும் தெரியவில்லை. ஆதலால் மேநாட்டு முறைகள் அனைத்தும் நம்முடைய விவசாயத்துக்கு ஏற்றதல்ல. நாம் நம்முடைய கிராமங்களையும் குடியானவ பட்டாதார்களையும் அடிப்படையாகக்கொண்டே நம்முடைய விவசாயத்தைச் சீர்படுத்தவேண்டும். அவ்வழியே நமது நாட்டையும் மேன்மையுறச் செய்யும்.

3. சோஷலிஸ்டு கக்ஷியின் ஆக்ஷியால் நமது நாட்டுக்கு விளையும் வினைகள் பலவற்றுள் ஒன்று மிகவும் கவனிக்கதற்பாலது. நமது நாட்டின் ரெயில்வேக்களிலும், ஆலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களின் சங்கை ஒருகோடியாகும். நகரங்களில் இதர தொழில்களைச் செய்யும் கைத்

தொழிலாளர்களேயும் இவர்களுடன் சேர்த்துக்கொண்டபோ திலும், எல்லாம் சேர்ந்து, தொழிலாளரின் சங்கை இரண்டு கோடியை அதிகரிக்காது. விவசாயத்தொடர்புள்ள குடியானவரின் சங்கையோ 17½ கோடியாகும். சோஷலிஸ்டு கக்ஷியின் ஆட்சியில், இக்குடியானவர் 17½ கோடி மக்கள், இரண்டு கோடி தொழிலாளரின் ஆட்சிக்குள்ளாவர். சோஷலிஸ்டு கக்ஷி ஆட்சி பெற்றால் அது தொழிலாளரின் உயர்வைக் கருதுமென்பதில் சந்தேகமில்லை. இப்பொழுதே, ஒரு தொழிலாளியின் சராசரிவருமானம் ஒரு குடியானவனுடைய சராசரி வருமானத்தைவிட பலமடங்கு பெருத்திருக்கிறது: இவ்வித்தியாசம் இனியும் பெருக்கும். குடியானவனுடைய உயர்வைக்குறித்து சோஷலிஸ்டுகளுக்கு உறுப்படியான திட்டமும் இல்லை.

4. கனிப்பட்டவர்களுடைய பாட்டினாலும், முயற்சியினாலும் முதிர்ந்த தொழில் நிலையை அடைந்திருக்கும் நாடுகளுக்கே சோஷலிஸம் பொருந்தும். தொழில் வளத்தில் மிக இளமையிலிருக்கும் இந்நாட்டில் சோஷலிஸ்டு ஆக்ஷியைப் புகுத்துவது இதின் தொழில் அபிவிருத்தியைக் குறுக்குவதாகும். ஒரு நாட்டை ஆள்வதற்குத் தொழிலாளர் முன்வரும் முன்னர், அவர்களிடம் தொழில் திறமை, நாணயம், ஒழுங்கு ஆகிய குணங்கள் அமைந்திருக்கவேண்டும்: நாட்டின் நலமே தங்களுடைய நலன் என்னும் மனப்பான்மையும் இருத்தல் வேண்டும். நமது தொழிலாளர்கள் கூச்சலிடவும், வேலை நிறுத்தவும் கற்றார்களேயொழிய ஒரு நாட்டையாள்வதற்கு வேண்டிய அரிய குணங்களிற் பயின்றாரில்லை. நமது நாட்டின் தொழில் வளமும் மேனாடுகளைப் போல் பெருத்த ஆலைகளால் ஏற்படக்கூடியதல்ல. குடிசைத் தொழில்கள் கிராமங்கள்தோறும் வேரூன்றி நமக்குத் தொழில் வளத்தைக் கொடுக்கவேண்டும்.

5. நமது தொழிலாளரிடத்தில், மற்ருெரு தவருன கொள்கை பரவி வருகிறது. அதாவது, ஒரு தொழிலின் நிகர வருமானத்தில், மூலதனத்துக்காக ஒரு பகுதியை ஒதுக்கிவிட்டு, மற்ற பாகம் முழுதையும் தங்களுக்குள் பங்கிட்டு கொடுக்கவேணுமென்கிற கோரிக்கையாகும். இது முற்றும் தவறு. தொழிலாளிக்கு தன்னுடைய திறனுக்கும் பொறுப்புக்கும் ஏற்ற ஊதியம் மட்டும்தான் கிடைக்கும். எந்த தொழிலிலும் லாபம் என்பது பொது மக்களிடம் சம்பாதித்ததேயாகும். அது பொது மக்களுடைய பணம்: அதில் எஞ்சுவது பொது மக்களிடம் திரும்பிப்போய்ச் சேருவதுதான் ஞாயம். இதையவர்கள் சர்க்கார்விதிக்கும் வரிகளின்மூலமாக அடையவேண்டும்.

## 5. குடியானவனுடைய கோரிக்கை.

1. குடியானவனுடைய முதல் எதிரி நமது லேவாதேவிக்காரன். இவன் எந்த சட்டத்தையும் கண்டு அஞ்சாதவன். செட்டிநாட்டுப் பிரபுக்கள், பிறநாடுகளைப் பாழாக்கியதுடன், தமிழ் நாட்டு கிராமங்களையும் சூனியமாக்கி, அங்குள்ள நிலங்களைப் பாதிக்குமேல் விலைக்கு கட்டிக் கொண்டிருந்தனர். சென்ற சில ஆண்டுகளில் நிலங்களின் விலை உயரவே, அவர்கள் அவைகளைவிற்று கோடிக்கணக்காகச் சம்பாதித்துக் கொண்டுவிட்டனர். மற்றபல பட்டரை லேவாதேவிக்காரர்களும் குடியானவனை வதிப்பதில் எந்த விதத்திலும் இந்த பிரபுக்களுக்குப்பின் வாங்கவில்லை. சென்னை விவசாயிகளின் கடன் நிவாரண சட்டத்தையும், இந்த புண்ணியவான்கள் தங்களுக்கு அநுகூலமாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இச்சட்டதைக் காரணமாகச்சொல்லி, இதற்கு முன்பு பாண்டும் கொதவையும்

எழுதி வாங்கிகொண்டு கொடுத்த கடன்களுக்கு, இப்பால், சுத்த கிரய பத்திரங்களை எழுதி வாங்கி வந்திருக்கின்றனர். இவர்களுடைய மோசங்களிலிருந்து மீண்டாலொழிய குடியானவனுக்கு உய்வில்லை. சென்ற 30 ஆண்டுகளில் குடியானவன் இழந்த நிலங்களையெல்லாம் அவன் மீண்டும் அடையும்படி சர்க்கார் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். இது அவனுடைய முதல் கோரிக்கை. இதனால் யாருக்கும் எவ்வித அநீதியும் நிகழாது. லேவாதேவிக்காரன் விரும்புவது அவனது முதலும் வட்டியும் மட்டுமாகும். கடனுக்காக நிலத்தைக் கட்டிக்கொண்டிருப்பது ஏற்காது.

2. இரண்டாவதாக, அவன் லேவாதேவிக்காரனுக்குத் துணைவனான வர்த்தகனிடமிருந்து காப்பாற்றப்பட வேண்டும். குடியானவனுக்குச் சுலபமான கடன் வசதி செய்து கொடுப்பதுடன், அவன், தன்னுடைய விளைபொருள்களைச் சரியான காலத்தில் சரியான விலைக்கு விற்கவும் உதவி பெற வேண்டும்.

3. அவனுடைய மூன்றாவதுகோரிக்கை அவனுடைய வழக்குகள், அவனுடைய இடத்திலேயே, அவனுக்குச்செலவும் அலைச்சலுமில்லாமல், சடுதியில் தீர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்.

4. கடைசியாக அவன் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய லஞ்ச தொந்திரவினின்றும் காப்பாற்றப்படவேண்டும். குடியானவன் அரசியல் அதிகாரத்தைப் பெற்றாலொழிய குடியானவனைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மதிக்கவும் மாட்டார்கள், அவனை நேர்மையுடன் நடத்தவும் மாட்டார்கள்.

5. விவசாயத்தின் செழிப்புக்கு வேண்டிய திட்டங்களையும் திருத்தங்களையும் செய்து கொடுக்கவும், குடியான

வனுடைய கிராம வாழ்க்கை சுகமாக இருத்தற்கு வேண்டிய வசதிகளை அளிக்கவும், சர்க்கார் எப்பொழுதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவனும் அவனுடைய ஆடுமாடுகளும் நோயற்றுவாழவேண்டும். அவனுக்குப் போக்குவரத்து வசதிகள் ஏராளமாக இருக்கவேண்டும். குடிசைத்தொழில்கள் கிராமங்களில்வேரூன்றிதழைக்கவேண்டும். கிராமங்கள்மீண்டும்செல்வப்பெருக்கையடைய வேண்டும். எந்தஅதிகாரியையும்கண்டு அஞ்சாமல் குடியானவன் சுதந்திரத்துடன் வாழவேண்டும். அப்பொழுதுதான் பாரதநாடும் சிறப்புடன் தலை நிமிர்ந்து நிற்கும். பிறநாடுகளின் மதிப்பையையும் பெறும்.

## 6. சுந்திரகோள கக்ஷிகள்.

1. தமிழ் நாட்டின் சிறுமை அதின் அறிவாளிகள்பால் காணும் சமூக வாழ்வுபற்றிய குறுகிய நோக்கமாகும். தமிழ்நாடு, பள்ளிபறை பதினெட்டு ஜாதிகளுடன், ஒரு ஜாதிபேதக் களஞ்சியமாக விளங்குகின்றது. அப்படியிருக்க, இவ்வறிஞர்கள், இந்நாட்டு மக்களைப் பார்ப்பனரென்றும், பார்ப்பனரல்லாதாரென்றும், இருபிரிவுகளாக வகுக்கின்றனர். பார்ப்பனரைத் தனியாக ஒதுக்குவது அவர்களுடைய மேம்பாட்டுக்காகவல்ல. அவர்களைச் சிறுமைப்படுத்துவதற்காகும். பார்ப்பனர் சிறுமையுறினும், ஏனையோர் ஒன்றுபடின், அதுபோற்றுதற்குரியதே. ஆனால், ரெட்டி மாதர்கள் செங்குந்த புமான்களை மணப்பதாவது, அல்லது வாணியஸ்திரீகள் வேளாள புருஷர்களைக் கொள்வதாவது, வழக்கமாகிவிடவில்லை. நாம் அப் புனித சம்பவத்தினின்றும் வெகு தூரத்திலிருக்கிறோம். நாட்டின்கீழ் ஊன்றிக்கிடக்கும் ஜாதிபேதவேர்கள் இன்னும் அழியவில்லை. அது அவ்வண்ணமிருக்க, இவ்வறிவாளிகளுக்குப்

பார்ப்பனரிடத்தில் மட்டும் ஏனோ தீராத வைரம்? ஆனால் கெட்டுப்போன பார்ப்பனர்—பூணூலை யறுத்தெறிந்தோர், புலாலுண்போர், புகையிலையைப் புகைத்து அதை வானளாவ வீசுவோர்—ஆகியோரிடத்தில் இவருடைய வைரம் சிறிது தணிகிறது. நாம், அநேகதுறைகளில், மேனாடுகளை முழுதும் பின்பற்ற இயலாத நிலையிலிருக்கிறோம். சமூக வாழ்க்கைத் துறையிலும், நாம்கோரும் திருத்தங்கள் நம் அமைப்புக் கேற்றவையாயும், பரஸ்பர நேசத்தைக் கெடுக்காதவையா யுமிருக்கவேண்டும். துரிதப்படுவதினால்மட்டும், நாம்கோரும் பலன்கள் கிட்டிவிடா. தமிழ்நாட்டின் மேன்மையை விரும்பு வோர், மக்களிடைத் தவறாத சமபுத்தியைக்காட்ட வேண் டும். ஒன்றுபட்ட வாழ்வினாலும், உயர்ந்த ஒழுக்கத்தினா லும்மட்டும் நாம் நாட்டைச் சீரும் சிறப்புமுறச்செய்ய இய லும். நாட்டின்வளம் பெருகின், எவருக்கும் எக்குறையு மிராது. ஆனால் நாம் விரோத விதையைவிதைத்தால், அது பின்பு விஷக்கனியையே கொடுக்கும்.

2. தமிழ் நாட்டின், சுய, அரசியல் முயற்சியாகிய, "ஜஸ்டிஸ் கக்ஷி", முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், பெரு த்த ஆரவாரத்துடனும் முழக்கத்துடனும் தோன் றிற்று. இதின் வேகம் குன்றி பல வருஷங்களாகி விட்டன. இது சாதித்தது பேர்போன வகுப்பு வாத சர்க்கார் உத்திரவாகும். ஆனால் இது கற் பித்த மனப்பான்மை தமிழருக்கு இயற்கையாகிவிட்டது. இது இப்பொழுது தமிழ்நாட்டு காங்கிரசு வாதிகளுடன் அளவளாவி வருகிறது. இம்மாகாண சர்க்காரின் விசை, "ஜஸ்டிஸ் கக்ஷி"யின் ஜனனஸ்தானமாகிய கோயமுத்தூரில் இருந்துவருவதும் கவனிக்கத்தக்கது.

3. தமிழ் நாட்டின் மற்ற அரசியல் கக்ஷியினர் தங்க

ருடைய சட்டையின் நிறத்தால் அறியப்படுவர். இவர்கள் மூவகையராவர். கருஞ் சட்டையினர், செஞ்சட்டையினர், கருப்பும் சிகப்பும் கலந்த நிறச்சட்டையினர். கருஞ்சட்டையினர், ஜஸ்டிஸ் கக்ஷியினரைப்போல், தமிழ் நாட்டுத்தனித் தோன்றலாவர். இவர்கள் தமிழ்நாட்டு முதலாளிக் கூட்டத்தின் கையாட்கள். இவர்களுடைய கொள்கை, தமிழ் நாட்டுமக்களைக் கொள்ளையடிக்கும் (exploit செய்யும்) உரிமை, தமிழ்நாட்டு முதலாளிகளுக்கே உரித்து என்பதாகும். "பாரதநாடு" என்னும் மொழியே இவர்களுக்கு கசக்கும். வட இந்தியாவுடன் எல்லாவித தொடர்பையும் ஒழித்துவிட வேண்டுமென்றும், வட இந்தியர்கள் அனைவரையும் தமிழ் நாட்டினின்று விரட்டிவிட வேண்டுமென்றும், இவர்கள் ஓயாது கூச்சலிடுவர். பர்மாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டவர்களும், தமிழ்நாட்டுக் குடியான மக்களைப் பாழாக்கியவர்களுமான செட்டிநாட்டு லேவாதேவிக்காரர்களையாவது, அல்லது கைத்தறி நெசவாளர் "நூலோ நூல்" என்று கதறினபொழுதும், சாதாரண மக்கள் "துணியோ துணி" என்று அலறினபொழுதும், செவி சாய்க்காது, அதிகாரிகளின் உடந்தையின்பேரில், கள்ள வியாபாரத்தில் இறங்கி, கோடிக்கணக்காக பணம் சம்பாதித்த தமிழ்நாட்டு ஆலைச்சொந்தக்காரர்களையும், இவர்கள், ஒருபொழுதும், குறை கூறுவதே கிடையாது. இவர்கள் ஜஸ்டிஸ்கக்ஷியைவிட ஒருபடி முன்னேறியவர்கள். கடவுள் ஒருவர் உண்டு என்பதை நம்பாதவர்கள். ஜஸ்டிஸ் கக்ஷியினர் நேராகச்செய்ய வெட்கப்படும் காரியங்களையும் இவர்கள் கூசாமல் செய்வர். இவர்கள் தேசாபிமானமென்பதையாவது, நமது சரித்திரத்தின் படிப்பினையையாவது அறியாதவர்கள்.

4. தமிழ் நாட்டு கம்யூனிஸ்டுகள் செஞ்சட்டையின

ராவர். இவர்கள் ரஷ்யாவின் உத்திரவின் கீழ், அவர்களுடைய பண உதவியைக்கொண்டு,செயலாற்றுகின்றவர்கள் இவர்கள் நாஸ்திகர்கள்: தேசாபிமானம் லவலேசமும் இல்லாதவர்கள்: புண்ணிய பாவங்களில் நம்பிக்கையற்றவர்கள். இவர்களுடைய நோக்கம் இந்நாட்டை ரஷ்யாவுக்கு அடிமையாக்குவதாகும். இவர்கள் கையாளும் முறைகள் பயங்கரமானவை. இவர்கள் ரெயில்வண்டித் தொடர்களைக் கவிழ்த்து, நிரபராதிகளான மக்களைக் கொலை செய்வர்: கட்டிடங்களுக்குத் தீவைப்பர். கிராமங்களைக்கொள்ளையிட்டு பொருள்களைச் சூறையாடுவர். இவர்களை மனிதத்தன்மை விட்டு விட்டது, இவர்களிடம் மிருகத்தன்மை குடிகொண்டு விட்டது. இவர்ளுடைய இருக்கை பொது வாழ்வுக்குப் பெருத்த அபாயமாகும். கருப்பும் சிகப்பும் கலந்த நிறச சட்டையினர் இவ்விரு சட்டையினரின் தீ நெறிகளிலும் தேர்ந்தவர். தமிழ் நாட்டின் இப்பனுதைக் கக்ஷியினரால் மக்களுக்கு என்றும் துயரமேயொழிய நன்மை ஒரு பொழுதும் ஏற்படாது.

## 7. விவசாயிகளின் கக்ஷி.

1. தமிழ் நாட்டின், மேற்கூறிய சில்லரைக் கக்ஷிகளுக்காவது, அல்லது ஜஸ்டிஸ் கக்ஷிக்காவது, அடுத்த தேர்தலில் வெற்றி கிடைப்பது சாத்தியமல்ல, காங்கிரசு கக்ஷி அகில இந்திய கக்ஷியாகையால், அது, தன் முழு பலத்தையும் தேர்தலில் உபயோகிக்கும். ஆனல் மக்கள் அதின் வேண்டுகோளுக்குச்செவிசாய்ப்பர்என்றுநினைக்க இடமில்லை. அதின் அதிகிரமங்களை அவர்கள் மறந்திருக்க முடியாது, மக்களுக்கு காங்கிரசின்பால் வெறுப்புள்ளதையறிந்து, சோஷலிஸ்டுகள் தங்களுக்கு வெற்றி கிடைத்து விடுமென

நினைக்கின்றனர். சோஷலிசம் விவசாய நாடாகிய நம் நாட்டுக்கு ஒவ்வாதென்பதையும், அது இந் நாட்டின் தற்கால நிலையில், தனிநபர்களுடைய தொழில் முயற்சியைத் தடுத்து தொழிலபி விருத்தியைக் கெடுத்து விடுமென்பதையும் முன்பு கூறியுள்ளோம். பொறுப்பற்று, நினைத்ததற்கெல்லாம் வேலை நிறுத்தத்தைக் கையாளும் நமது சோஷலிஸ்டுகள், இந் நாட்டையாள்வதற்கு அருகர்களுமல்லர். இந் நாட்டின் விவசாய வளத்தைப்பெருக்குவதற்கு, சோஷலிஸ்டுகளுக்கு உருவமான கொள்கையாவது திட்டமாவது கிடையாது. இந் நாட்டின் விவசாய சித்தியைப் பெறுவதற்கு விவசாயிகளின் ஆக்ஷியே வேண்டியதாகும்.

2. இந்நாட்டில் ஒருவனுடைய சராசரி வருமானம் ஆண்டுக்கு ரூ. 255–0–0 என்று நிர்ணயிக்கப்படுகிறது. இது உயரவேண்டுமாயின் குடியானவனுடைய வருவாய் உயரவேண்டும். தொழிளாளியின் வருவாய்மட்டும் உயர்ந்தால் போதாது. இவ்வுயர்வை யடைவதற்கும் குடியானவனுடைய ஆக்ஷி வேண்டும்.

3. விவசாயிகளின் ஆக்ஷி இந் நாட்டுச்குத் தக்கதாயினும், அவர்களை ஒன்று சேர்த்து ஒரு கக்ஷியாகக் பிணைப்பதும், அக்கக்ஷியை அரசியல் துறையில் ஈடுபடும்படி செய்து அதை நடத்துவதும், சாத்தியமாவென்று பலர் சந்தேகமுறுகின்றனர் ஆனல் இச்சந்தேகத்துக்கு ஆதாரமே கிடையாது. கிராமங்கள்தோறும் விவசாயிகள் இருக்கின்றனர். கிராமசங்கங்களை அமைப்பதும், அவைகளின் பிரதிநிதிகளைக் கொண்டு ஜில்லா சங்கத்தை எய்படுத்துவதும், ஜில்லா சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்டு மாகாண சங்கத்தை ஸ்தாபிப்பதும் கஷ்டமானதல்ல. தேர்தல்களுக்கு அபேக்ஷகர்களைத் தேர்ந்தெடுப்பதும், அவர்களுக்கு வேண்டிய உதவி

யைப் புரிவதும், மாகாண சங்கத்தின் நிர்வாகிகளின் கடமையாகும். விவசாயிகளின் சார்பாக நிற்கும் அபேக்ஷகர்கள் வெற்றியுறுவர் என்பது திண்ணம். ஏனெனின், பெரும்பான்மையான வாக்குகள் விவசாயிகளிடத்தே இருக்கின்றன. விவசாயிகள் உறுதிகொண்டால் இந்நாட்டின் ஆக்ஷியைச் சுலபமாகக் கைப்பற்றி விடுவர் என்பதிற் சந்தேகமில்லை.

4. விவசாயிகள் நுட்பமான புத்தியும் சிறந்த உலக அநுபவமும் வாய்ந்தவர்கள். இவர்களிற் கல்வி கற்ற மேதாவிகள் பலர் இருக்கின்றனர். இவர்கள், நாட்டை ஆளும் விஷயத்தில், காங்கிரசு மந்திரிகளைவிட பன் மடங்கு அதிக ஆற்றல் படைத்தவர்கள். ஆனால் இவர்கள், தங்களுடையசக்தியையும் உரிமையையும் உணராமல், காங்கிரசின் மாய வலையில் சிக்கிக்கொண்டிருக்கின்றனர், இவர்கள் தங்களுடைய உண்மையான கடமையை உணர்ந்து விவசாயிகளின் இயக்கத்தை நடத்தினால், அதின் ஒலி, இரண்டொரு மாதங்களில், நாடெங்கும் கேட்கும். இவர்களுடைய அதிருஷ்டவசத்தால், "விவசாயி" என்னும் பேருடைய பத்திரிகை இப்பொழுதே திருச்சியில் தோன்றியுளது. இதை ஆதரிக்க வேண்டியது விவசாயிகளின் கடமையாகும். இது விவசாயிகளுக்கு உன்னதமான சேவையைச் செய்யுமென்பதில் ஐயமில்லை. இந்த ஒரு பத்திரிகை மட்டுமல்ல. இன்னும் அநேக பத்திரிகைகளும் இவர்களை ஆதரிக்க முன்வரும்.

5. விவசாயிகளின் ஆக்ஷி எத்தகைத்தாயிருக்கும் என அறியமக்கள்விரும்புவர். காங்கிரசுகாரர்களைப்போல்இவர்கள் பிரிட்டிஷார் வகுத்தமுறையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றமாட்டார்கள், இவர்களுடைய ஆக்ஷியில் இப்பொழுதுள்ள அரசாங்கத்தின் உருவமே முற்றிலும் மாறிவிடும்.

அதிகாரம் என்பதையே காணமுடியாது. எல்லாம் பொது ஜனஊழியமாக விளங்கும். கலெக்டர், டிப்டிகலெக்டர், தாசில்தார் என்போர், அவர்களுடைய பரிவாரங்களுடன் மறைந்துவிடுவர். ஜில்லா உத்தியோகஸ்தர்களுடைய அரண்மனைகள் சர்க்காரின் காரியாலயங்களாக உபயோகமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வசிக்க வீடுகள் அளிக்கப்படும். போக்குவாத்து போலீசுகாரன் ஜட்காவுக்கு நாலணு மாமூலைப் பெறமுடியாது. ஸார்ஜெண்டும் பஸ்ஸுக்கு ரூ 200-0-0 மாமூலை இழந்துவிடுவான். போலீசு சப்இன்ஸ்பெக்டருடைய வருமானம் கொலைக்கு ரூ 500-0-0 என்பது போய்விடும். லஞ்சம் வாங்கிய உத்தியோகஸ்தன் உடனே வேலையை இழப்பான். மதுவிலக்குச்சட்டம் ஒழிந்துவிடும், அல்லது மாறிவிடும். அநாகரீகமான விற்பனைவரி மறைந்துவிடும். வருமானவரிச் சட்டத்தின் அநீதிகள் ஒழியும். அநாமதேயமான மொட்டைகள் வருமானவரி உத்தியோகஸ்தர்களாக இருக்கமாட்டார்கள். கள்ளவியாபாரிகளின் முழு ஆஸ்தி அல்லது பெரும்பாகம் பரிமுதல்செய்யப்படும். அவர்களுடைய சீரும் நிலையும் குலைக்கப்படும். கள்ள வியாபாரம் தலையெடுக்காமலிருக்க எல்லா முறைகளும் கையாளப்படும். மக்களின் வாழ்க்கை, எல்லா வழிகளாலும், சுகமாகவும் சுலபமாகவும் செய்யப்படும்.

6. விவசாயிகள் வகுக்கும் ஆக்ஷிமுறை திறமையும் புதுமையும் பொருந்தியிருக்கும். கிராமங்கள் தோறும் கிராமச்சங்கங்கள் ஏற்படும். 25 சதுரமைல் விஸ்தீர்ணத்தில் அடங்கியதும், 5000 முதல் 10,000 வரை ஜனசங்கை கொண்டதுமான கிராமங்களின் தொகுதி இலாகாவெனப்படும். இவ்விலாகாவின் பொது சபைக்குப் பிரதிநிதிகள் நேராகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பொதுசபை ஒரு நிர்வாகசபை

யை நிர்ணயிக்கும். இவ்விலாக்காசபைகள் சர்வ அதிகாரமும் பெற்றிருக்கும்.

(1) இலாகாவின் பொது நிர்வாகம் முழுதும் இவை கையிலிருக்கும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களை நேமிக்கவும் நீக்கவும், குற்றங்களுக்காக கேசுகளை ஆரம்பிக்கவும் வாபஸ் வாங்கவும், வரிகளைப்போடவும் வஜா செய்யவும், கிராம சுகாதாரத்துக்கு வேண்டிய காரியங்களைச் செய்யவும், இவைகளுக்கு அதிகாரமிருக்கும்.

(2) ஒவ்வொரு இலாக்காவிலும் ஒரு பண்டகசாலை இருக்கும். இது குடியானவனுடைய விளைபொருள்களைப் பெற்று அவைகளைச் சரியான விலைக்கு விற்றுக்கொடுக்கும். அவனுக்குவேண்டிய சாமான்களை விற்கும். அவனுக்கு கடன்கள் கொடுத்தும் உதவி செய்யும். இதுசம்பந்தமான பூர்ண அதிகாரமும் இலாகசபையிலிருக்கும்.

(3) ஒவ்வொரு இலாகாவிலும் ஒரு விவசாயப் பண்ணை, மனிதர்களுடைய ஆஸ்பத்திரி, கால் நடைகளின் ஆஸ்பத்திரி, உயர்தரப்பள்ளி ஆகியவையிருக்கும். இவைகளையெல்லாம் இலாகாசபை நடத்தும்.

(4) விவசாயத்துககு வேண்டிய எல்லா வசதிகளும் இலாகாசபையின் ஆதீனத்திலிருக்கும். இதற்கு ரஸ்தாக்கள் போடவும், கட்டிடங்கள் கட்டவும், மராமத்து செய்யவும் அதிகாரமுண்டு.

(5) குறிப்பிட்ட இலாகாவிவகாரங்களையும் கேசுகளையும் விசாரித்து பைசல் செய்ய இலாகா சபை ஏற்பாடு செய்யும்.

(6) இலாகாவிலுள்ள எல்லா தேவஸ்தானங்களும் இலாகாசபையின் ஆதீனத்திலிருக்கும்.

(7) சர்க்காருடைய கண்ட்ரோல் சட்ட விஷயங்களிலும் இலாகாசபைக்கு அதிகாரமிருக்கும்.

7. இலாகா சபைகளுக்கு மேல் ஜில்லாசபைகள் இருக்கும். அவைகளுக்கும் மேல் மாகாண மந்திரிசபையும் சட்டசபைகளுமிருக்கும். இலாகாசபைகளைப்போல் முனிசிபாலிடிகளுக்கும் அவைகளின் எல்லைக்குள் பூர்ண அதிகாரமிருக்கும். விவசாயிகளின் இயக்கம் தமிழ் நாட்டில் தோன்றின போதிலும், அது, சடுதியில், மாகாண இயக்கமாகவும், அகில இந்திய இயக்கமாகவும் மாறிவிடும் என்பது திண்ணம்!.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
EGMORE, MADRAS-600 008
220140